**தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களிலிருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 06 ஆம் திகதி மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.3.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.2 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.9 (அ) |
| | | 4. கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.11 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக | 1. பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.8, 2.9(இ) (i) – (v) |
| | | 2. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.3.2 |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமை. | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றன என்பதுவும். | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றது என்பதுவுமாகும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.10 |
| )(1)128க( | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவினத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.9(ஆ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள | 1. நட்டங்களும் சேதங்களும்<br>2. நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.7<br>2.6 |

சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணம் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) வறுமையைக் குறைக்கும் செயற்பாடுகளின் விநியோகம் மற்றும் முகாமை செய்தல்.

(ஆ) அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை நிருவகித்தல்.

(இ) அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும்.

(ஈ) தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்தல்.

(உ) மாவட்ட திட்டங்களின் நிருவாகமும் வழிநடத்தலும்.

(ஊ) தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்.

(எ) வருமான சேகரிப்பு.

(ஏ) அனர்த்த நிவாரண செயற்பாடுகளை அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கமைத்தல்.

(ஐ) மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகள்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள்

மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| (i) | கோறளைப்பற்று | | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற பின்வரும் நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல் |
| (ii) | கோறளைப்பற்று வடக்கு | | • கோரிக்கை கடிதங்கள், |
| (iii) | கோறளைப்பற்று மேற்கு | | |
| (iv) | கோறளைப்பற்று தெற்கு | | |
| (v) | கோறளைப்பற்று மத்தி | | |
| (vi) | ஏறாவூர் நகரம் | | |

| | | |
|---|---|---|
| (vii) ஏறாவூர் பற்று<br>(viii) மண்முனை வடக்கு<br>(ix) மண்முனை மேற்கு<br>(x) மண்முனைப்பற்று<br>(xi) மண்முனை தென் எருவில் பற்று<br>(xii) காத்தான்குடி<br>(xiii) போரதீவுப்பற்று<br>(xiv) மண்முனை தென்மேற்கு | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களைத் தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம் | விண்ணப்பப் படிவம், வதிவிடச் சான்றிதழில் மேலொப்பமிடல்.<br>• தகவலறியும் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குதல்.<br>• தேசிய அடையாள அட்டை விநியோகம்.<br>• காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல்.<br>• வறுமையைக் குறைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br>• இறப்பு பிறப்புச் சான்றிதழ் வழங்குதல்.<br>• மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>• சங்கங்களை பதிவு செய்தல்.<br>• வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.<br>• ஒப்பந்த வேலைகளில் ஈடுபடுதல். |

**2.3 செயலாற்றல்**

---------------

**2.3.1 திட்டமிடல்**

-------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 14,777 பிரதான செயற்பாடுகள் காணப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 14 பிரதேச செயலகங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட 14,777 பிரதான பணிகளில் நிறைவேற்றக்கூடிய வகையில் 12,553 மாத்திரம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 69 சதவீதமாக இருந்தது. அவ்வாறு சகல செயற்பாடுகளும் நிறைவேற்றப்படாமையால் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 31 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நாளது வரையாக்கப்பட்ட நிறுவன அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் (Imprest Requirment Plan) செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 பணிகள் நிறைவேற்றப்படாமை

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்ட செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டு கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவடைய வேண்டிய திகதி | முடிவடைந்த திகதி | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | ரூபா மில்லியன் | |
| மருத்துவமனை கட்டடம் நாவற்காடு மண்முனை மேற்கு | 3 | 07.07.2017 | 06.10.2017 | 10.04.2018 | 2.56 | குறிப்பிட்ட காலத்தினுள் சில இறுதி வேலைகள் பூரணமாக ஒப்பந்ததாரரால் நிறைவேற்றப்படுவதற்கு பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| மீனவர் விடுதி கோறளைப்பற்று | 5.5 | 06.10.2017 | 14.12.2017 | 23.03.2018 | 5.44 | குறிப்பிட்ட காலத்தினுள் குறித்த விடுதியினை பூர்த்தியாக்குவதற்கு பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | கூறுகளின் எண்ணிக்கை | விளைவற்ற காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனங்கள் | 48 | 10 வருடங்கள் |
| (ii) | நீர்ப்பம்பிகள் | 200 | 01 - 27 வருடங்கள் |

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

### தீர்க்கப்படாத பொறுப்புகள்

மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான கட்டிடத்திற்காக மட்டக்களப்பு மாநகர சபைக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 190,668 தொகையான ஆதன வரி 2018 மே 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் சுனாமி மீள்குடியேற்ற வீடமைப்புத் திட்டத்திற்காக திராய்மடுவில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக சட்டரீதியற்ற போலியான ஆவணங்களை சமர்ப்பித்த 03 நபர்களுக்கு ரூபா 6.3 மில்லியன் தொகையான இழப்பீட்டினை பெறுவதற்கு அனுமதி வழங்கிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திணைக்களத்தின் திரியசவிய கடன் திட்டத்தின் கீழ் புதிதாக நலன் உதவி பெறுவதற்கு தகுதி பெற்றுள்ள குறைந்த வருமானம் பெறுவோருக்கு கோறளைப்பற்று வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினால் வழங்கப்பட்ட 09 பயனாளிகளின் கடன் தொகைகள் மற்றும் அவர்களின் சேமிப்பு கணக்கிலிருந்து ரூபா 325,000 பணம் வாழ்வாதார எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களால் மோசடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவ்வங்கியின் முகாமையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பயனாளிகளால் அளிக்கப்பட்ட எழுத்துமூல வாக்கு மூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், குறித்த உத்தியோகத்தர்களுக்கெதிராக இதுவரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நட்டங்களும் சேதங்களும்

2011, 2012, 2014 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வாகன விபத்துக்களினால் ரூபா 1,323,289 பெறுமதியான சேதம் ஏற்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக கணக்காய்வுத் திகதி வரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முகாமைத்துவ பலவீனங்கள்

-----------------------------------

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்ககள் அவதானிக்கப்பட்டன.

(அ) கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகத்தினால் வேலையற்ற 500 இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்கத்துடன் ஆடைத் தொழிற்சாலை நிறுவுவதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு 30 ஆண்டு காலத்திற்கு ரூபா 30 மில்லியன் குத்தகை பெறுமதிக்கு வழங்கப்பட்ட 0.46 ஹெக்டெயர் காணி குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது இருந்தமையால் பிரதேச செயலாளர் அக் காணியை மற்றுமொரு தனியார் நிறுவனத்திற்கு சுற்றுலா விடுதியை அமைப்பதற்காக முதலீட்டு சபை, காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது வழங்கியிருந்தார். இக் காணி இவ்வாறு பொதுமக்கள் குடியிருக்கும் பிரதேசத்தில் மக்களின் கலாச்சாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இன்றுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் 06/2016 ஆம் இலக்க இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், கர்ப்பிணித் தாய்மாருக்கு 10 மாதங்களுக்கு போசாக்கு உணவுப்பொருட்கள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை உரிய காலத்தில் வழங்கி குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து உரிய காலத்தினுள் அவர்களுக்கு பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 14 பிரதேச செயலகங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் உரிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாதமையால் 02 தொடக்கம் 210 நாட்களுக்கு மேலான காலவீச்சில் ரூபா 5,308,000 பெறுமதியான 2,654 உறுதிச்சீட்டுக்கள் செல்லுபடியற்றதாக காணப்பட்டிருந்தன.

(இ) மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தினால் மாவடிமுனைமாரி பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,868,238 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மத்திய மருந்தகக் கட்டிடம் 2018 யூன் 29 ஆம் திகதி வரை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் ''தியவர பியச'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 54 மீனவ குடும்பங்களிற்கு மலசலகூட வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 37 மீனவ குடும்பங்களிற்கு கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படாமையினால் அவர்களினால் மலசலகூட வசதிகளை பெறமுடியாமல் இருந்ததுடன் 17 மீனவ குடும்பங்களிற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் முறையான பயனாளிகள் தெரிவு செய்யப்படாமையினால் ரூபா 510,000 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 1,485,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2018 மே 17 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சனசமூக நிலையம் இற்றை வரைக்கும் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்ட காணிக்கான ரூபா 90,000 குத்தகை தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பல்வேறு தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களினால் 2009 ஆம் ஆண்டிலிருந்து சட்ட விரோதமாக அரச காணிகளில் அமைக்கப்பட்ட 14 தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக ஏறாவூர்ப்பற்று மற்றும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை

**2.9 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 542.5 | 527.9 | 14.6 | 2.7 |
| | மூலதனம் | 974.2 | 974.1 | 0.1 | - |
| | **மொத்தம்** | **1,516.7** | **1,502** | **14.7** | **1** |
| 2014 | மீண்டெழுபவை | 443.3 | 442.2 | 1.1 | 0.2 |
| | மூலதனம் | 231.6 | 231.6 | - | - |
| | **மொத்தம்** | **674.9** | **673.8** | **1.1** | **0.2** |
| 2015 | மீண்டெழுபவை | 543.7 | 538.2 | 5.5 | 1 |
| | மூலதனம் | 214.3 | 63.2 | 151.1 | 70.5 |
| | **மொத்தம்** | **758** | **601.4** | **156.6** | **20.7** |
| 2016 | மீண்டெழுபவை | 574 | 569.3 | 4.7 | 0.8 |
| | மூலதனம் | 323 | 304.8 | 18.2 | 5.6 |
| | **மொத்தம்** | **897** | **874.1** | **22.9** | **2.6** |
| 2017 | மீண்டெழுபவை | 577.6 | 574.4 | 3.2 | 0.6 |
| | மூலதனம் | 274 | 162.7 | 111.3 | 40.6 |
| | **மொத்தம்** | **851.6** | **737.1** | **114.5** | **13.4** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை தயாரித்தல்**

---

**பணிகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கால வரையறைகளை கருத்திற் கொள்ளாது ஒதுக்கீடுகளை மேற்கொண்டமை**

---

மாவட்ட செயலகத்தினால் புதிய மாவட்ட செயலக கட்டிட நிர்மாண பணிகளை மேற்கொள்வதற்காக மொத்த கிரய மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான மொத்த நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சாத்தியவள ஆய்வுகள் மற்றும் பெறுகை செயன்முறையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததனால் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 110.5 மில்லியன் அதாவது 58 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மிகை செலவினம்**

---

மீண்டெழும் செலவின விடயமொன்றின் கீழ் ரூபா 934,050 மிகைச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை**

---

02 மூலதன செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 2.7 மில்லியன் மிகைநிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவின விடயங்களிற்குரிய நிதியேற்பாடுகளில் மொத்தம் ரூபா 2.16 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் சேமிப்புகள் 20 சதவீதத்திற்கும் 22 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டன.

**(இ) பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

---

பல்வேறு பணிகளுக்காக 30 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களினால் ரூபா 2,922,286,613 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 2,540,689,854 மற்றும் ரூபா 60,091,960 எனுமாறு ரூபா 2,600,781,814 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 319,046,955 மற்றும் ரூபா 2,457,844 எனுமாறு ரூபா 321,504,799 கூட்டுத்தொகை அல்லது வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் முறையே 11 சதவீமாகவும் 1 சதவீதமாகவும் சேமிப்பு காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) சின்னக்காலபோட்டமடு இலுப்படிச்சேனை வாய்கால் புனரமைப்பு**

--------------------------------------------------------------------------------

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தினால் சின்னக்காலபோட்டமடு இலுப்படிச்சேனை கால்வாய் புனரமைப்பிற்காக ரூபா 4,704,000 தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு அவ்வேலைகள் 2017 செப்தெம்பர் 06 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ரூபா 5,187,771 பெறுமதியான கால்வாய் புனரமைப்பு வேலையினை மதிப்பீடின்றி பத்திரிகை விளம்பரத்தில் ரூபா 5,880,000 பெறுமதிக்கு பிரதேச செயலாளரினால் பகிரங்க விலை கோரப்பட்டிருந்ததனால் ரூபா 692,229 தொகை ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- கால்வாய் அணைக்கட்டின் நீரோட்ட சுவரிற்கு மேற்பகுதியில் மண்ணரிப்பை தடுப்பதற்கு மேலதிக குறுக்கு சுவர் அமைக்கப்படாமையினாலும் துளைகள் இடப்படாமையினாலும் சுவரின் உள் மற்றும் வெளிப் பகுதிகளில் 14 இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

- இக்கால்வாயின் நீரோட்ட சுவரின் வேலையை ஆரம்பிக்கும் முன் முறையான சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு அமைவிடத்திற்கு பொருத்தமான மதிப்பீடுகளை மேற்கொண்டு அமைக்கப்படாததனாலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் முறையான மேற்பார்வை இன்மையினாலும் அமைக்கப்பட்ட நீரோட்ட சுவர் சரிந்து விழுந்து காணப்பட்டிருந்தது. இதனால் அப்பிரதேசத்திலுள்ள 500 ஏக்கர் நெற்காணிகளுக்கும் நீர்ப்பாசனத்தினைப் பெற முடியாத நிலமை காணப்படுகின்றது. அதன் பிரகாரம் இக்கால்வாய் புனரமைப்பிற்கு செலவிடப்பட்ட தொகை பயன்பாடற்றிருந்தது.

**(ii) மட்டக்களப்பு வாவியினை எல்லையிடும் திட்டம்**

-------------------------------------------------------------

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தினால் மட்டக்களப்பு வாவியினை எல்லையிடும் திட்டத்தின் கீழ் 12,800 கொங்கிறீட் தூண்கள் நடுவதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மாவட்ட செயலகத்திற்கு ரூபா 37,864,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இச்செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி கொங்கிறீட் தூண்கள் நடுவதற்காக அமைச்சு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெறவேண்டியிருந்த போதிலும் இதனை தவிர்ப்பதற்காக இத் திணைக்கள பெறுகைக் குழுவினால் அனுமதியளிக்கப்படும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்று பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக மூன்று ஒப்பந்தக்காரர்களிடையே ஒரே நேரத்தில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

- கொங்கீறீட் தூண்களின் மேல் நுனிப்பகுதி வளைக்கப்பட்டிருக்க வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதனைப் பொருட்படுத்தாமல் 3,837 தூண்களின் மேல்பகுதி மதிப்பீட்டுக்கு முரணாக வளைக்கப்படாமல் மட்டமாக காணப்பட்டிருந்தன.

- அங்கீகரிக்கப்பட்ட கொங்கீறீட் தூண்களின் வரைபடத்தின் பிரகாரம் 450 மில்லி மீற்றர் மண்ணின் உட்பகுதியிலும் வெளிப்பகுதியில் 900 மில்லி மீற்றர் உயரத்திலும் நடப்பட வேண்டியிருந்த போதிலும் முறையே 1,055 தூண்கள் 200 மில்லி மீற்றர் உட்பகுதிக்கும் 1,219 தூண்கள் 750 - 800 மில்லி மீற்றர் மண்ணின் வெளிப்பகுதியிலும் நடப்பட்டிருந்தமை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் எழுத்து மூல அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- வாவியினை எல்லையிடுவதற்கு நடப்படாமல் காணப்படும் 3,713 கொங்கிறீட் தூண்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் கரையோர தோணாக்களை எல்லையிடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(iii) வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் ஆடுகள் வழங்குதல்**

------------------------------------------------------------------------

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 98 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 9,800,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- கொள்வனவு செய்யப்படும் ஆடுகள் 01 தொடக்கம் 02 வயதிற்குட்பட்டதாகவும் 25 தொடக்கம் 35 கிலோ கிராம் நிறைகளிற்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டுமென விலைக்கேள்வி ஆவணம் VI இன் தொழில்நுட்ப விபரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக ஒரு வயதிற்கு குறைந்த மற்றும் இரண்டு வயதிற்கு மேற்பட்ட 180 ஆடுகளும் 25 கிலோ கிராம் நிறைக்கு குறைந்த 184 ஆடுகளும் பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றுகான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- கொள்வனவு செய்யப்பட்ட 380 ஆடுகளின் சுகாதார நிலை மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கேள்வி ஆவணத்தின் தொழில்நுட்ப விபரங்கள் என்பவற்றை பரிசோதிக்காமல் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டமையினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆடுகளில் 13 ஆடுகள் வழங்கப்பட்ட ஒருமாத காலத்தினுள் இறந்திருப்பது பயனாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து மூல வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**(iv) உள்நாட்டு பிரச்சனையால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கான வீடமைப்புத் திட்டம்**

---

ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தால் உள்நாட்டு பயங்கரவாத பிரச்சனையால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு புதிதாக 107 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீற்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினூடாக மாவட்ட செயலகத்திற்கு ரூபா 856 மில்லியன் தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், ஆகக் கூடுதலாக புள்ளிகளைப் பெறும் பயனாளிகள் மாத்திரம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அப்பிரதேசத்தில் 80 இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெறக்கூடிய அதிகளவான பயனாளிகள் காணப்பட்டிருந்தும் இதனைப் பொருட்படுத்தாமல் 45 தொடக்கம் 80 வரையான குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள பயனாளிகள் சுற்றறிக்கைக்கு முரணாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு புதிதாக வீடுகள் நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(v) வெள்ள அனர்த்த குறைப்பு செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல்**

---

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வெள்ள அனர்த்தத்தினை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட செட்டிபாளயம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் மூடி கொண்ட வடிகாண் அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் ரூபா 15.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- இச்செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட ரூபா 12.5 மில்லியன் நிதியினை பயன்படுத்தி செட்டிபாளயம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 365 மீற்றர் நீளத்திற்கு கொங்கீறீட் வீதி மற்றும் வடிகாண் அமைக்கப்பட வேண்டுமென அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அனுப்பப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய MDM/PD/ADB/2016 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக 346 மீற்றர் நீளத்திற்கு மாத்திரம் மூடி கொண்ட வடிகாண் அமைப்பதற்காக ரூபா 10.4 மில்லியன் பெறுமதிக்கு மாவட்டச் செயலகத்தினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டு அவற்றிற்காக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
- மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் நிதியானது 2017 யூன் 13 ஆம் திகதியளவில் நிறுத்தப்படுமென்பதனை பொருட்படுத்தாமல் 2017 ஆகஸ்ட் 02 ஆம் திகதியளவில் வடிகாணை பூர்த்தி செய்வதற்கு மாவட்டச் செயலகத்தினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதனால் மேற்குறிப்பிட்ட திகதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டிருந்த நிதி நிறுத்தப்பட்டிருந்தமையினால் 288 மீற்றருக்கு வடிகாண் அமைக்கப்பட்டு இதில் 113.5 மீற்றர் நீளத்திற்கு மாத்திரம் மூடி இடப்பட்டிருந்ததுடன் 32 மீற்றருக்கு மண் அகழப்பட்ட நிலையில் குறித்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

- ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், மாற்றம் செய்யப்பட வேண்டிய வேலைகளின் அளவிற்காக ஒப்பந்ததாரரினால் மாவட்டச் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 09 வேலைகளின் அளவுகள் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரமின்றி மாற்றம் செய்யப்பட்டு அவற்றிற்காக மேலதிகமாக ரூபா 1,251,430 தொகை மாவட்டச் செயலகத்தினால் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

- இச்செயற்திட்டத்தினை மேலும் 38 மீற்றர் நீளத்திற்கு விஸ்தரிப்பதற்காக ரூபா 3.75 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக இரு கிராம அபிவிருத்தி சங்கங்களிற்கு பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

- இச்செயற்திட்டமானது செட்டிபாளயம் வடக்கில் மேற்கொள்வதற்கு எந்தவிதமான முன்மொழிவு அறிக்கைகள் மற்றும் முறையான சாத்தியவள ஆய்வுகளின்றி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இதற்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்கு உரிய 26901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | உச்ச எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 44.00 | 44.39 | 28.00 | 34.84 | 125.00 | 111.45 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை**

கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 169,356 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டதுடன் அவற்றை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

## 2.11 கட்டுநிதிக் கணக்கு

திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதிகளில் குறித்த பணிகளை நிறைவேற்றாது, அந்தப்பணிகளை ஆண்டின் இறுதியில் நிறைவேற்றுவதற்கு முனைவதால் தேவையான கட்டுநிதிகள் திறைசேரியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 390,815,339 பெறுமதியான 12 பணிகள் நிறைவேற்ற முடியாது போயிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தன.

## 2.12 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 07 வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,006,403 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கோயில் புனர்நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 200,000 தொகையினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரியின் மூலம் பேணப்படும் வைப்புக் கணக்கில் ரூபா 563,837 தொகை 1983 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டுவந்துள்ள போதிலும், மாவட்ட செயலகத்தினால் பேணப்படும் வைப்புக் கணக்கில் குறித்த மீதி காட்டப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், இதனை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

### 2.13.1 இணைப்புச் செய்யப்பட்டுள்ள பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 493.61 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 510,988 ஆக இருந்தது.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 49 | 47 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 11 | 33 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 919 | 778 | 141 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 142 | 122 | 20 | - |
| (v) | ஏனையவை (தற்காலிகம்) | - | 08 | - | 08 |
| | **மொத்தம்** | **1,154** | **966** | **196** | **08** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தில் இரு சாரதிகள் மிகையாக காணப்பட்டிருந்த போதிலும் இதற்கு மேலதிகமாக 03 வாகன சாரதிகள் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் மிகை எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) வெற்றிடமாகக் காணப்படும் 06 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் பிரதேச செயலகத்தில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 196 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.